2022 ஜனவரி 7]

முற்பகல் 11–00

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அவர்களை வணங்குகிறேன். 2021–2022 ஆம் ஆண்டின் பொது நிறுவனங்களின் குழுவின் 4 முதல் 8 வரையிலான 5 அறிக்கைகளை பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. நா. இராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களின் நன்மதிப்பையும், நம்பகத் தன்மையையும் பெற்று, நல்லாட்சி தந்துகொண்டிருக்கின்ற மாண்புமிகு மக்களின் முதல்வர் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2022 ஆம் ஆண்டுக்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முதலாவது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நன்றி, வணக்கம்.

4. குழுக்களின் அறிக்கைகளை புத்தக வடிவில் அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கைகளை கணினியில் பார்க்க வேண்டுமென்றால், என்ன கேள்வி-பதில் என்பதை கணினியில் பார்க்கத் தெரியவில்லை.*